முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 229/2018

வா.சா.5 – சுபபிரமணி

14–06–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) 3ம் வாதி சொன்னதன் பேரில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். தாவா விவரங்கள் அவர் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். கூளத்தேவர் முக்கு கம்பம் தாலூக்காவில் உள்ளது என்றால் சரிதான். கம்பத்துக்கும் கம்பம் மெட்டுக்கும் எவ்வளவு கிலோ மீட்டர் என்றால் 15 முதல் 16 கி.மீ. இருக்கும். கம்பம் தமிழ்நாட்டில் உள்ளது என்றால் ஆமாம். கம்பம்மெட்டு கேரளா மாநிலத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2) 1ம் வாதி தங்கம்மாளுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் தெரியாது. 1ம் வாதிக்கும் இறந்து போன ராகவனுக்கும் திருமணம் ஏற்பட்டது பொறுத்து ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு இடையேயான திருமணம் திருப்பூரில் நடைபெறவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் இருவரும் கம்பத்தில் வாழ்ந்ததாக நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

3) 1ம் வாதிக்கும் இறந்துபோன ராகவனுக்கும் திருமணம் நடந்ததாக வாதிகளுக்கு நான் தெரிந்தவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணை சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மேலே சொன்ன குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.06.14 06:34:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.